**கவனிக்க.**- *2008.01.25 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1535 - 2008 පෙබරවාරි 01 වැනි සිකුරාදා - 2008.02.01

*1535 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 88 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 92 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும். வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, பெப்புருவரி 08 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, சனவரி 25 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான “புதிய சேர்வாளர்கள்” ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - ஹம்பாந்தோட்டை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவராகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, மாச்சு மாதம் 01 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம், குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2008, சனவரி 10.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 01.அம்பாந்தோட்டை | பெலியத்த | கஹவத்தை கீழ் பிரிவு பிறப்பு இறப்பு மற்றும் கிருவாபத்துவ தெற்கு பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , அம்பாந்தோட்டை. |

2-72

## சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு

உளவளத்துணை உதவியாளர் பதவி வெற்றிடங்களுக்கான பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல்

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சிலுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **இப்பதவி தொடர்பான சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும் ;

(ii) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பந்தி முதல் 12 ஆம் பந்தி வரை குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் உரியதாகும் ;

(iii) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குகள் ஏற்பாடுகளுக்கும் மற்றும் அரசினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள, முன்னர் வெளியிடப்பட்டுள்ள ஏனைய விதிகள், ஒழுங்குகளுக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

(iv) இந்த நியமனம் 03 வருடங்கள் தகுதிகாண் காலத்தை உள்ளடக்கியுள்ளது.

2. **சம்பள அளவுத் திட்டம்**.- இப்பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற பட்டதாரிகளுக்கு பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. எம்/என்/4- 2006 – A இற்கமைவாக ரூபா 15,215- 10□215 – 4□240 – 7□320-15□360-ரூபா 25,965 சம்பள அளவுத் திட்டம் உரியதாகும்.

3. **ஏனைய தகைமைகள்**.- (i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று அதாவது 2008.02.29 அன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச/மாகாண சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதல்ல).

4. **ஆட்சேர்ப்பு முறை**.- நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில், கூடிய புள்ளிகளினைப் பெற்ற விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

கீழ்வரும் வெற்றிடங்களுக்கு குறிப்பிட்ட கல்வித்தகைமையுடைய பட்டதாரிகள் மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும் :-

| பதவியின் பெயர் | கல்வித் தகைமைகள் | வெற்றிடம் நிலவும் பிரிவு | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. உளவளத்துணை உதவியாளர் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொண்ட உளவளத்துறை தொடர்பான சிறப்பு பட்டம் : அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொண்ட பட்டத்துடன் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உளவளத்துணை தொடர்பாக ஒரு வருட டிப்ளோமா பாடநெறியினை மேற்கொண்டு சித்தியடைந்திருத்தல் | உளவளத்துணைப் பிரிவு | 32 |

5. **விண்ணப்பிக்கும் முறை**.- கீழுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை பிழையின்றி பூரணப்படுத்தி 2008.02.29 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக "செயலாளர், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு, 5 ஆம் மாடி, "செத்சிறிபாய", பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அரச சேவையிலுள்ளவர்கள் திணைக்களத் தலைவரின் நற்சான்றிதழுடன் விண்ணப்பித்தல் வேண்டும். (தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்கு உடன்படுவதாகக் குறிப்பிடுதல்

வேண்டும்) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உளவளத்துணை உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் சரியாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

இவ்வறிவித்தலில் இல்லாத விடயமொன்று தொடர்பாகவும், ஆட்சேர்ப்பு அல்லது வெற்றிட எண்ணிக்கையை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் செயலாளருக்கு உரித்துடையதாகும்.

(திருமதி) விஜி. ஜெகராசசிங்கம்,
செயலாளர்,
சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு.

5 ஆம் மாடி,
"செத்சிறிபாய",
பத்தரமுல்லை,
2008.02.01.

| அலுவலக உபயோகத்திற்கு |
|---|
| |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு**

*சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல்*

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் மொழி மூலம் | |
| விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் | |
| அப்பதவிக்கு உரித்தான பிரிவு | |

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (வணக்கத்துக்குரிய/திரு./திருமதி/செல்வி) :-----.
Name with Initials (Rev./ Mr./ Ms.) :-----.

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.
Full Name :-----.

3. நிரந்தர முகவரி :-----.

4. தபால் முகவரி :-----.

5. நிரந்தரக் குடியிருப்பு மாவட்டம் :-----.

6. தேசிய அடையாள அட்டை இல. :-----.

7. பால் (ஆண்/பெண்) :-----.

8. (i) பிறந்த திகதி :- ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
(ii) 2008.02.29 ஆந் திகதியன்று வயது :- வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

9. இனம் :-----.

10. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :-----.

11. பல்கலைக்கழகப் பட்டம் தொடர்பான குறிப்புக்கள் :-

(i) பல்கலைக்கழகம் :-----.
(ii) பட்டமளிப்பு நடைபெற்ற திகதி :-----.
(iii) பொது/விசேடம் :-----.
(iv) பாடம் :-----.
(v) வகுப்பு : 1 ஆம்/2 ஆம்/சாதாரணம் :-----.
(vi) மொழி :-----.

12. ஏனைய கல்வி சம்பந்தமான தகவல்கள்/தொழில் தகைமைகள் இருப்பின் (பட்டப்பின் படிப்பு/டிப்ளோமா) அது தொடர்பான தகவல்கள்-

(i) -----.
(ii) -----.
(iii) -----.

13. மொழித்திறன் (சம்பந்தமான கூட்டுக்குள் "✓" இடவும்)-

| | மிக நன்று | நன்று | சாதாரணம் | பலவீனம் |
|---|---|---|---|---|
| சிங்களம் | ----------- | ----------- | ----------- | ----------- |
| தமிழ் | ----------- | ----------- | ----------- | ----------- |
| ஆங்கிலம் | ----------- | ----------- | ----------- | ----------- |

14. அனுபவம் : -----.

**விண்ணப்பதாரரின் உறுதியுரை**

........................ ஆகிய நான் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எல்லாத் தகவல்களும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் உறுதிமொழிகின்றேன். நான் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டோ அல்லது திறமையின்மை காரணமாக கருணை அடிப்படையில் சேவையிலிருந்து ஓய்வு பெறவில்லை எனவும் பதவியை விட்டுச் சென்ற ஒருவர் இல்லையெனவும் பிரகடனப்படுத்துகின்றேன். இங்கு என்னால் தரப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானதென அல்லது பிழையானதென தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு தெரியவந்தால் நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின் அது பற்றி தெரியவந்தால் சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தொடர்பாக திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ............................................................................ என்பவர் இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் நிரந்தர/ தற்காலிக/அமைய ஊழியராக சேவையாற்றுகின்றார் எனவும் இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படின் இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியுமெனவும்/முடியாதெனவும் அறியத்தருகின்றேன்.

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவிப் பெயர் : -----.
அமைச்சு/திணைக்களம் :-----.
திகதி :-----.

2-02

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பதவி வெற்றிடங்கள் பொருட்டு திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தில் நிலவுகின்ற மிருக ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், மிருக வைத்திய உத்தியோகத்தர்கள் (வெற்றிடம் காணப்படுவது வடமாகாணம் மற்றும் கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக் களங்களில் மாத்திரமாகும்) மற்றும் கால்நடை உத்தியோகத்தர்கள் (இவ்வெற்றிடங்கள் அதிகம் காணப்படுவது வடமாகாணம் மற்றும் கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தில் மாத்திரமாகும்) போன்ற வெற்றிடங்களினை நிரப்பும் பொருட்டு உரிய தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இயைய 8 1/ 2"□12" அளவிலான A4 கடதாசியின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2008.02.29 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "செயலாளர், கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு, தபால் பெட்டி இலக்கம் 45, சாந்த மைக்கல் வீதி, கொழும்பு" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இப்பரீட்சை நடாத்தப்படும்.

**குறிப்பு**.- (I) மிருக ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் மிருக வைத்தியர் போன்ற பதவிகளுக்கு திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் மாத்திரமே ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றன. கால்நடை வளர்ப்பு உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 50% திறந்த போட்டிப் பரீட்சை மூலமாக மேற்கொள்ளப்படும். இலக்கம் 1436/ 8 மற்றும் 2006.03.13 ஆந் திகதி வெளிவந்த இலங்கை வர்த்தமான அறிவித்தலில் திருத்தம் செய்யப்பட்ட கால்நடை உற்பத்தி சுகாதார சேவை பிரமாணத்தின் 10 (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விகிதாசாரத்திற்கு அமைய கால்நடை வளர்ப்பு உத்தியோகத்தர் பதவிகளுக்கு உரிய எண்ணிக்கையினை மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பினூடாக ஆட்சேர்ப்பு செய்ய இயலாத விடத்து மீதப்படுத்தப்படுகின்ற வெற்றிட எண்ணிக்கை திறந்த போட்டிப் பரீட்சையினூடாக நிரப்பப்படும்.

(II) விண்ணப்பங்கள் ஒருவருக்கு உரிய தகைமைகள் இருப்பின் மிருக ஆராய்ச்சி உத்தியோகத்தர் மிருக வைத்தியர் மற்றும் கால்நடை உத்தியோகத்தர் போன்ற பதவிகளினுள் எந்தவொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பிக்க முடியும்.

(III) விண்ணப்பம் அல்லது அது தொடர்பான கடிதம் ஏதும் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எத்தகைய முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி வரை விண்ணப்பத்தினை தாமதப்படுத்துவதால் ஏற்படும் நஷ்டங்களுக்கு விண்ணப்பக்காரரே பொறுப்பாவர். விண்ணப்பம் உள்ளிட்டு அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்தின் மிருக வைத்தியர்/ கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர்/கால்நடை உத்தியோகத்தர்" எனும் சொற்றொடர் எழுதப்படல் வேண்டும் (தாம் விண்ணப்பம் செய்யும் பதவியினை மாத்திரம் குறிப்பிடுதல் வேண்டும்).

(IV) அடிப்படை தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*2.* **பணிக்கமர்த்துவதற்கான சேவை நியதிகளும் நிபந்தனைகளும்**.- (I) பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவை/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(II) தெரிவு செய்யப்படும் விண்ணப்பக்காரர் அவர்களால் விண்ணப்பிக்கப்படுகின்ற இலங்கைச் கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவி ஒன்றினை நிரப்பும் பொருட்டு நியமனம் செய்யப்படுவர்.

(III) ஏனைய சேவை நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும் 1980.10.31 ஆந் தேதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமான பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாறாகும். அத்துடன் அங்கு திருத்தம் செய்யப்பட்ட பிரமாணங்கள், இலங்கை அரசின் தாபன விதிக் கோவையின் ஒழுங்குவிதிகள் மற்றும் அவ்வப்போது அரசினால் வெளியிடப்படும் பொது நிர்வாக சுற்றறிக்கைகளுக்கு அமையவுமாகும்.

*3.* **சம்பளத்திட்டம்**.- இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்தின் பொருட்டு பொ. நி. சு. இலக்கம் 6/2006 இற்கு அமைய SL-I- 2006 சம்பள அளவுத்திட்டம் (அதாவது ரூபா 22,935-10□645-8□790 - 17□1,050 - ரூபா 53,555) ஆகும். இச்சம்பளத் திட்டத்தில் 4 ஆவது படிமுறையினை அடைவதற்கு முன் முதலாவது வினைத்திறமைக்காண் தடைப் பரீட்சையிலும் 7 ஆவது படிமுறையினை அடைவதற்கு முன் இரண்டாவது வினைத்திறமைக்காண் தடைப் பரீட்சையிலம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- (i) வகுப்பு II தரம் II இற்கு நியமனம் பெறுகையில் குறிப்பிட்ட அடிப்படை தகைமைகளுக்கும் மேலாக பெறப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப் படக்கூடியதும் உரியதுமான கலை முதுமாணி/விஞ்ஞான முதுமாணி அல்லது அதற்கு மேலான பட்டப்படிப்பினை பெற்றுள்ளவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத் திட்டத்தில் 4 ஆவது படிமுறைக்கு மிகையாகாத படிமுறையில் வைக்கப்படுவர்.

*4.* **ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுவான தகைமைகள்**.- (அ) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கைச் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 20 இற்கு குறையாமலும் வயது 35 இனை விஞ்சிடாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) முதுமானிப் பட்டம் பெற்றுள்ள விண்ணப்பகாரர் தொடர்பில் உச்ச வயதெல்லை 40 ஆகும்.

(ஈ) சிறந்த குணவியல்பும் தேகாரோக்கியமும் உள்ளவராக இருத்தல் வேண்டும். உடற்றகுதி வைத்திய பரிசீலனைச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) மிருக வைத்திய பட்டதாரிகள் இலங்கை கால்நடை வைத்திய சபையில் விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு முறைமைக்கு வயது எல்லை ஏற்புடையதாகாது.

5. ***திறந்த முறைமிலான ஆட்சேர்ப்பு :***

***கல்வித் தகைமைகள் :***

(I) ***கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் :***
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட மிருக வைத்திய விஞ்ஞானத் துறையில் நான்கு வருட 1 ஆம் வகுப்பு அல்லது 2 ஆம் வகுப்பில் உயர் மட்டத்தில் சித்தி பெற்றிருத்தல்.

(II) ***மிருக வைத்தியர் :***
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட மிருக வைத்திய விஞ்ஞானத்துறையில் நான்கு வருட பட்டப்படிப்பு.

(III) ***கால்நடை உத்தியோகத்தர் :***
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட மிருக வைத்திய விஞ்ஞானம்/கால்நடை வளர்ப்பு விஞ்ஞானம்/விவசாயம் சம்பந்தமான நான்கு வருட பட்டப்படிப்பு.

***குறிப்பு.***– (I) திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அடிப்படைக் கல்வித் தகைமையாகக் கருதப்படும் பட்டப்படிப்பு சம்பந்தமான முழுமையான தகைமையை பெற்றிருக்க வேண்டும். அதாவது இதன் பொருட்டு பட்டப்படிப்பு சான்றிதழ் வழங்கிய திகதியானது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னராகவோ இருத்தல் வேண்டும்.

(II) பெறுபேறுகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. ***ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமை.***– (அ) மிருக ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் மிருக வைத்தியர் ஆகிய பதவிகளுக்கு நியமனம் செய்கையில் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் மாத்திரமே ஆட்சேர்ப்புச் செய்யப்படும். கால்நடை உத்தியோகத்தர் பதவிகளுக்கு வெற்றிட எண்ணிக்கையில் 50& ஆனது திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும். கால்நடை உத்தியோகத்தர் பதவிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் மூலம் நியமனம் செய்வதன் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள வீதத்திற்கு தேவையான எண்ணிக்கையை நியமனம் செய்ய இயலாதவிடத்து மீதமாகவுள்ள வெற்றிட எண்ணிக்கையை திறந்த ஆட்சேர்ப்பின் மூலம் நிரப்பப்படும்.

(ஆ) விண்ணப்பக்காரர் ஒருவர் உரிய தகைமையினைக் கொண்டிருப்பின் அவர் மிருக ஆராய்ச்சி உத்தியோகத்தர், மிருக வைத்தியர், கால்நடை உத்தியோகத்தர் போன்ற பதவிகளில் எந்தவொரு பதவியின் பொருட்டும் வெவ்வேறாக விண்ணப்பிக்கலாம்.

(இ) பொது வினாப்பத்திரம் மற்றும் விடய தொடர்பான வினாப்பத்திரம் என்பவற்றில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற புள்ளிகளின் கூட்டுத்தொகையினை நிரையிடப்பட்டு மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வெற்றிடங்களினை அடிப்படையாகக் கொண்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு உரிய ஆட்சேர்ப்பு செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்கு எத்தகைய புள்ளிகளும் வழங்கப்பட மாட்டாது.

7. மிருக ஆராய்ச்சி உத்தியோகத்தர், மிருக வைத்தியர் மற்றும் கால்நடை உத்தியோகத்தர் பதவிகளின் பொருட்டு விண்ணப்பம் செய்வோர் பின்வரும் பாடங்களில் சித்திபெற்று தெரிவுப் பரீட்சையின் பொருட்டு சமுகம் கொடுக்க வேண்டும். விண்ணப்பகாரர் விண்ணப்பிக்கும் அனைத்து பதவிகளின் பொருட்டும் வெவ்வேறாக விண்ணப்பிக்க வேண்டும். பரீட்சைக் கட்டணமாக ரூபா 250 இனை பேராதனை தபாற் பணிமனையில் மாற்றக்கூடியவொரு எந்தவொரு தபாற்கந்தோரிலும் செலுத்தி கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிட்டு பெறப்பட்ட காசுக் கட்டளையினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டவும்.

மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளின் பொருட்டு விண்ணப்பிக்கின்ற அனைத்து விண்ணப்பகாரரும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் சித்தியடைந்து பொது வினாப்பத்திரத்திற்கும் விடையளித்தல் வேண்டும். அது பின்வருமருமாறு இரண்டு பகுதிகளினைக் கொண்டுள்ளது :–

(அ) பொது வினாப்பத்திரம் (முதலாவது பகுதி) – விவேகப் பரீட்சை (காலம் : 1 மணித்தியாலம் – 100 புள்ளிகள்) ;

இது விண்ணப்பக்காரரது விவாதிக்கும் திறன் மற்றும் ஆய்வு செய்யும் முறைமை தொடர்பில் பலதரப்பட்ட வினாக்களைக் கொண்டமைந்ததாகும்.

(ஆ) பொது வினாப்பத்திரம் (இரண்டாவது பகுதி) – பொது அறிவு (காலம் : 1 1/2 மணித்தியாலம் – 100 புள்ளிகள்) ;

இலங்கையின் அரசியல், சமூக கலாசாரம், பொருளாதாரம், சுற்றாடல் சம்பந்தமானதும் உள்ளூர், வெளியூர் தற்போதைய நிலவரம் மற்றும் விஞ்ஞானம், தொழில்நுட்பம், அபிவிருத்தி சம்பந்தமான அறிவைப் பரீட்சிக்கும் முறையில் அமைந்த வினாப்பத்திரம் ;

(இ) மேற்குறிப்பிடப்படும் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பகாரர் மேற்குறிப்பிடப்பட்ட பொது வினாப்பத்திரத்திற்கு மேலாக தாங்கள் விண்ணப்பிக்கும் பதவி அல்லது பதவிகளுக்கு பொருத்தமான துறையில் அறிவினை பரீட்சித்தலினை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட விடயம் சம்பந்தமான வினாப்பத்திரம்/வினாப்பத்திரங்களுக்கு தோற்ற வேண்டும். இந்த வினாப்பத்திரத்தின் பொருட்டு (காலம் : 1 1/2 மணித்தியாலம் – 200 புள்ளிகள்).

I. மிருக ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு விடயம் சம்பந்தமான வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு :

(1) * இலங்கையில் கால்நடை வளத் துறையில் உள்ள சிறப்பம்சங்கள் வெளிப்படும் விசேட அம்சங்கள், அபிவிருத்தி தேவைப்பாடு, வாய்ப்புக்களும் சவால் களும் ;

* கால்நடை வள உற்பத்தி, தயாரிப்பு, விற்பனை என்பன தொடர்பில் அத்துறையில் அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒழுங்கமைப்பு அமையப்பெற்றுள்ள விதம் ;

(2) இலங்கையில் பொருளாதார முக்கியத்துவமுடைய விலங்கு நோய், அந்நோய் தேசிய பொருளாதாரத்தில் ஏற்படுத்துகின்ற தாக்கம் மற்றும் அதனை கட்டுப்படுத்துதல், இலங்கையில் கால்நடைகளினால் மனிதனுக்கு பரவும் தொற்றுநோய் மற்றும் அவற்றினை கட்டுப்படுத்தலும் ;

(3) மனிதனது உணவிற்காக கால்நடை உற்பத்திகளினை பயன்படுத்துகையிலும் தயாரிப்பிலும் மிருக வைத்தியர்கள் பெரிதும் பங்களிப்பு செய்யவேண்டியுள்ளது. அவ்வகையில் அவ்வுற்பத்திகளது பயன்படுத்துகைக்காக கவனத்திற் கொள்ள வேண்டிய பாதுகாப்பு நிலைமைகள், அவ்வுற்பத்தி தயாரிப்பு தொடர்பில் அவற்றின் தரம் செயற்பாடு என்பவற்றினை கவனத்திற்கொள்ளல் ;

(4) இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் இருக்கும் வளங்களை திறனாக பயன்படுத்திக் கொள்வதும் பல்வேறு கால்நடை விசேடங்களின் பொருட்டு பயன்படுத்தக்கூடிய இன விருத்தி வழிமுறைமைகளினை இனங்காணல் ;

(5) பாரம்பரியமானதும் பாரம்பரியமற்றதுமான விலங்குணவில் கிடைக்கும் தன்மையும் அதன் எதிர்காலத் தேவைகளின் பொருட்டு மறுசீரமைப்புச் செய்யும் வழிமுறைகள் கால்நடைகளின் போசணைகளின் அவசியமும் அந்த விலங்கு வகைகளுக்கு ஏற்ப உணவு அட்டவணை தயாரித்தல் ;

(6) கால்நடை வளர்ப்பு, விவசாயம், நன்னீர் மீன் வளர்ப்பு, வனஜீவிகள் மற்றும் பொது மக்களுக்கான மிருக வைத்திய சேவை என்பன பொருட்டு முக்கியம் பெறும் கட்டளைகள், திருத்தச் சட்டங்கள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் அவற்றின் நோக்கங்களும் முக்கியத்துவமும் ;

(7) வெவ்வேறு பண்ணை உற்பத்தி முறைமைகள், கால்நடை வள உற்பத்தி பண்ணை திட்டமிடுதல், பண்ணையின் வரவு-செலவுத் திட்டத்தினை தயாரித்தல், பண்ணையில் பதிவேடுகளினை வைத்துக்கொள்ளல் மற்றும் விவசாய உற்பத்தி மற்றும் கால்நடை வளங்களிடையே இடம்பெறும் அந்நியோன்யமான பிணைப்பின் மூலம் உற்பத்தி திறனை மேம்படுத்தல் ;

(8) ஆராய்ச்சி வடிவமைப்பு உயிரியல் மூலதத்துவமும் மற்றும் அவற்றின் பிரயோகம், பெறுபேறுகளின் விளக்கமும் தீர்மானம் எடுத்தலும் ;

(9) ஆராய்ச்சியின் பொருட்டு விஞ்ஞான முறைமையிலான பயன்பாடு, ஆய்வுகூட தொழில்நுட்பம் மற்றும் முறைமைகள் கால்நடைத் துறையில் உள்ள நோய்களினைக் கண்டறிதல் மற்றும் நோய்த் தீர்மானம் ;

(10) கால்நடை தொற்றுநோய் தடுப்பு உபாயங்கள், கால்நடை ஏற்றுமதி இறக்குமதி மற்றும் கால்நடை உற்பத்திகள் தொடர்பில் கால்நடை தொற்றுநோய் தடுப்பு முறைமையில் உள்ள முக்கியத்துவம் ;

II. மிருக வைத்திய உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு விடயம் சம்பந்தமான வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் பின்வருமாறு :

1. * இலங்கையில் கால்நடை வளத்துறையில் உள்ள சிறப்பம்சங்கள் வெளிப்படும் விசேட அம்சங்கள், அபிவிருத்தி தேவைப்பாடு, வாய்ப்புக்களும் சவால் களும் ;

   * கால்நடை வள உற்பத்தி, தயாரிப்பு, விற்பனை என்பன தொடர்பில் அத்துறையில் அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒழுங்கமைப்பு அமையப்பெற்றுள்ள விதம் ;

(2) இலங்கையில் பொருளாதார முக்கியத்துவமுடைய விலங்கு நோய், அந்நோய் தேசிய பொருளாதாரத்தில் ஏற்படுத்துகின்ற தாக்கம் மற்றும் அதனை கட்டுப்படுத்துதல், இலங்கையில் கால்நடைகளினால் மனிதனுக்கு பரவும் தொற்றுநோய் மற்றும் அவற்றினை கட்டுப்படுத்தலும் ;

(3) மனிதனது உணவிற்காக கால்நடை உற்பத்திகளினை பயன்படுத்துகையிலும் தயாரிப்பிலும் மிருக வைத்தியர்கள் பெரிதும் பங்களிப்பு செய்யவேண்டியுள்ளது. அவ்வகையில் அவ்வுற்பத்திகளது பயன்படுத்துகைக்காக கவனத்திற் கொள்ள வேண்டிய பாதுகாப்பு நிலைமைகள், அவ்வுற்பத்தி தயாரிப்பு தொடர்பில் அவற்றின் தரம் செயற்பாடு என்பவற்றினை கவனத்திற்கொள்ளல் ;

(4) இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் இருக்கும் வளங்களை திறனாக பயன்படுத்திக் கொள்வதும் பல்வேறு கால்நடை விசேடங்களின் பொருட்டு பயன்படுத்தக்கூடிய இன விருத்தி வழிமுறைமைகளினை இனங்காணல் ;

(5) பாரம்பரியமானதும் பாரம்பரியமற்றதுமான விலங்குணவில் கிடைக்கும் தன்மையும் அதன் எதிர்காலத் தேவைகளின் பொருட்டு மறுசீரமைப்புச் செய்யும் வழிமுறைகள் கால்நடைகளின் போசணைகளின் அவசியமும் அந்த விலங்கு வகைகளுக்கு ஏற்ப உணவு அட்டவணை தயாரித்தல் ;

(6) கால்நடை வளர்ப்பு, விவசாயம், நன்னீர் மீன் வளர்ப்பு, வனஜீவிகள் மற்றும் பொது மக்களுக்கான மிருக வைத்திய சேவை என்பன பொருட்டு முக்கியம் பெறும் கட்டளைகள், திருத்தச் சட்டங்கள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் அவற்றின் நோக்கங்களும் முக்கியத்துவமும் ;

(7) வெவ்வேறு பண்ணை உற்பத்தி முறைமைகள், கால்நடை வள உற்பத்தி பண்ணை திட்டமிடுதல், பண்ணையின் வரவு-செலவுத் திட்டத்தினை தயாரித்தல், பண்ணையில் பதிவேடுகளினை வைத்துக்கொள்ளல் மற்றும் விவசாய உற்பத்தி மற்றும் கால்நடை வளங்களிடையே இடம்பெறும் அந்நியோன்யமான பிணைப்பின் மூலம் உற்பத்தி திறனை மேம்படுத்தல் ;

(8) ஆராய்ச்சியின் பொருட்டு விஞ்ஞான முறைமையிலான பயன்பாடு, ஆய்வுகூட தொழில்நுட்பம் மற்றும் முறைமைகள் கால்நடைத் துறையில் உள்ள நோய்களினைக் கண்டறிதல் மற்றும் நோய்த் தீர்மானம் ;

(9) இலங்கையின் கிராமிய பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு தொழில்நுட்ப அறிவினை பெற்றுக்கொடுக்கும் பொருட்டு விவசாய, விவசாய கால்நடை வளர்ப்பு விரிந்த சேவைகளின் அணுகுமுறை மற்றும் முறைமைகள் ;

(10) உலகமயமாதல், தகவல் மற்றும் தொடர்பாடல் முறைமை மற்றும் இலங்கையில் கால்நடை வளத்துறையில் அவற்றின் முக்கியத்துவமும் அதன் தாக்கமும் ;

(11) கால்நடைவளத் துறையில் சர்வதேச வர்த்தகம் வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவமும் தாக்கமும்;

(12) கால்நடை தொற்றுநோய் தடுப்பு உபாயங்கள், கால்நடை ஏற்றுமதி இறக்குமதி மற்றும் கால்நடை உற்பத்திகள் தொடர்பில் கால்நடை தொற்றுநோய் தடுப்பு முறைமையில் உள்ள முக்கியத்துவம் ;

III. கால்நடை உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு விடயம் சம்பந்தமான வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு :

(1) * இலங்கையில் கால்நடை வளத்துறையில் உள்ள சிறப்பம்சங்கள் வெளிப்படும் விசேட அம்சங்கள், அபிவிருத்தி தேவைப்பாடு, வாய்ப்புக்களும் சவால் களும் ;

* கால்நடை வள உற்பத்தி, தயாரிப்பு, விற்பனை என்பன தொடர்பில் அத்துறையில் அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒழுங்கமைப்பு அமையப்பெற்றுள்ள விதம் ;

(2) கிராமிய மற்றும் தேசிய பொருளாதாரத்தில் கால்நடை வளத்துறையின் முக்கியத்துவமும் அதன் தொடர்பும் ;

(3) இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் இருக்கும் வளங்களை திறனாக பயன்படுத்திக் கொள்வதும் பல்வேறு கால்நடை விசேடங்களின் பொருட்டு பயன்படுத்தக்கூடிய இன விருத்தி வழிமுறைமைகளினை இனங்காணல் ;

(4) பாரம்பரியமானதும் பாரம்பரியமற்றதுமான விலங்குணவில் கிடைக்கும் தன்மையும் அதன் எதிர்காலத் தேவைகளின் பொருட்டு மறுசீரமைப்புச் செய்யும் வழிமுறைகள் கால்நடைகளின் போசணைகளின் அவசியமும் அந்த விலங்கு வகைகளுக்கு ஏற்ப உணவு அட்டவணை தயாரித்தல் ;

(5) கால்நடை வளர்ப்பு, விவசாயம், நன்னீர் மீன் வளர்ப்பு, வனஜீவிகள் மற்றும் பொது மக்களுக்கான மிருக வைத்திய சேவை என்பன பொருட்டு முக்கியம் பெறும் கட்டளைகள், திருத்தச் சட்டங்கள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் அவற்றின் நோக்கங்களும் முக்கியத்துவமும் ;

(6) வெவ்வேறு பண்ணை உற்பத்தி முறைமைகள், கால்நடை வள உற்பத்தி பண்ணை திட்டமிடுதல், பண்ணையின் வரவு-செலவுத் திட்டத்தினை தயாரித்தல், பண்ணையில் பதிவேடுகளினை வைத்துக்கொள்ளல் மற்றும் விவசாய உற்பத்தி மற்றும் கால்நடை வளங்களிடையே இடம்பெறும் அந்நியோன்யமான பிணைப்பின் மூலம் உற்பத்தி திறனை மேம்படுத்தல் ;

(7) இலங்கையின் கிராமிய பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு தொழில்நுட்ப அறிவினை பெற்றுக்கொடுக்கும் பொருட்டு விவசாய, விவசாய கால்நடை வளர்ப்பு விரிந்த சேவைகளின் அணுகுமுறை மற்றும் முறைமைகள் ;

(8) உலகமயமாதல் தகவல் மற்றும் தொடர்பாடல் முறைமை மற்றும் இலங்கையின் கால்நடை வளத்துறையில் அவற்றின் முக்கியத்துவமும் தாக்கமும் ;

(9) கால்நடை வளத்துறையில் சர்வதேச வர்த்தகம், வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவமும் தாக்கமும் ;

(10) கால்நடை தொற்றுநோய் தடுப்பு உபாயங்கள், கால்நடை ஏற்றுமதி இறக்குமதி மற்றும் கால்நடை உற்பத்திகள் தொடர்பில் கால்நடை தொற்றுநோய் தடுப்பு முறைமையில் உள்ள முக்கியத்துவம் ;

8. **மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு முறைமை.**–

(i) கால்நடை உத்தியோகத்தர் பதவியில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 50% வரை மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் மூலம் நிரப்பப்படும்.

(ii) **மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புத் தொடர்பில் தகைமைகள் முறைமை.**– கால்நடை வளர்ப்பு/இருவருட விவசாய டிப்ளோமாவுடன் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் தற்போது சேவையில் உள்ள கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர்/ ஆராய்ச்சி உதவியாளர் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் ஒருவராக இருத்தல் அல்லது இலங்கை கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் ஒருவராகவோ அல்லது இலங்கை தொழில்நுட்ப சேவையில் விசேட வகுப்பில் அல்லது I ஆம் வகுப்பில் வெற்றிகரமாக 4 வருடம் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட விலங்கு பரிபாலன விஞ்ஞானத்தில் அல்லது விவசாய தொடர்பில் நான்கு வருட பட்டப்படிப்புடன் 5 வருட சேவைக்காலம் உள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தில் கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர்/ஆராய்ச்சி உதவியாளர்/மாகாண அரச சேவையில் உள்ள கால்நடை அபிவிருத்தி ஆலோசகராக இருத்தல்.

(iii) **ஆட்சேர்ப்பு செய்யும் முறைமை.**– (அ) மேலே 7 இன் பொது வினாப்பத்திரத்திற்கும் மற்றும் கால்நடை உத்தியோகத்தர் பொருட்டு விடய தொடர்பான வினாப்பத்திரத்திற்கும் விடையளிக்க வேண்டும்.

(ஆ) பொது வினாப்பத்திரத்திற்கும் விடய வினாப்பத்திரத்திற்கும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வெற்றிடங்களினை அடிப்படையாகக் கொண்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு உரிய முறையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

9. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது கீழ்க்காணும் ஆவணங்களின் மூலப்பிரதிகளினை சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ii) பட்டம் மற்றும் உயர் தகைமைகளைக் கொண்ட கல்விச் சான்றிதழ்கள் ;

(iii) அண்மையில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ் இரண்டு. அதில் ஒன்று பாடநெறி தொடர்பான பணிப்பாளரிடம் இருந்து, பல்கலைக்கழகத்தின் பேராசிரியரிடம் இருந்து, அல்லது விரிவுரையாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும். (தற்போதைக்கு இத்திணைக்களத்தில் சேவையில் உள்ளோர் தொடர்பில் இச்சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டியதில்லை) ;

(iv) சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சித்தியடைந்துள்ள உதிஉயர் பரீட்சைகளினது சான்றிதழ்கள்;

(v) மிருக வைத்தியராக மிருக வைத்திய சபையில் பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ் (மிருக ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் மிருக வைத்தியர் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பம் செய்வோர்க்கு மாத்திரம் பொருந்தும்).

10. (i) இவ்வர்த்தமான அறிவித்தல் ஒழுங்குவிதிகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்படாத விடயங்களில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரித்தாகும்.

(ii) வெற்றிடங்களினை நிரப்புதல் நிரப்பாமல் விடுதல் அல்லது ஒரு பகுதியினை மாத்திரம் நிரப்புதல் போன்ற விடயத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கே உரியதாகும்.

(iii) இவ்வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் மத்தியில் ஏதும் வேறுபாடு நிலவுமேயாயின் இங்கு சிங்கள மொழிமூலத்தினையே இறுதித் தீர்வாக கொள்ளல் வேண்டும்.

(iv) விண்ணப்பகாரர் எவராயினும் ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவரின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ அல்லது ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(v) விண்ணப்பகாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல் உண்மைக்கு புறம்பாக சமர்ப்பிக்கப்பட்டிருப்பது தெரியவரின் அல்லது ஏதாவது முக்கிய தகவல் ஒன்றினை அவர் வேண்டும் என்றே மறைத்து இருப்பாரேயாயின் அவர் சேவையில் நின்றும் நீக்கப்பட இடமுண்டு.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

சுனிமல் சேனாரத்ன,
செயலாளர்,
கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு,
என். என். இலக்கம் 56ஏ,
இல. 45,
சென் மைக்கல் வீதி,
கொழும்பு 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை**

II ஆம் வகுப்பு II ஆம் தரத்தில் பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை

*அலுவலக பயன்பாட்டிற்காக*

தெரிவுசெய்யும் பரீட்சைக்கான மொழிமூலம்
(உரிய கூட்டில் X அடையாளம் இடுக.)

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :----.

ஆங்கிலத்தில் (தனிப் பேரெழுத்துக்களால்) :-

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | |

(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கிலத்தில்-தனிப் பேரெழுத்துக்களால்)

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | |

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. தபால் முகவரி :----.
(முகவரியில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கவும்).

4. நிரந்தர வதிவிடத்திற்குரிய

(i) மாகாண சபை :----.
(ii) மாவட்டம் :----.

5. பிறந்த திகதி :----.

வருடம்: | | | | | மாதம் : | | | திகதி : | | |

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது :-

வருடங்கள் : | | | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

6. (அ) நீர் இலங்கைப் பிரசையா ? :----.
இனம் (சிங்களம்/இலங்கைத் தமிழ்/இந்தியத் தமிழ்/முஸ்லிம்/ஏனைய) :----.

7. (அ) பால் (ஆண்/பெண்) :----.
(ஆ) விவாகமானவர்/விவாகமாகாதவர்/விவாகரத்தானவர் : ----.

8. கல்வித் தகைமைகள் :-

| பட்டம்/ பட்டப்பின் படிப்பு | வகுப்பு | பல்கலைக்கழகம் | வருடம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

9. இலங்கை மிருக வைத்திய சபையில் பதிவுசெய்த இலக்கமும் திகதியும் :----.

10. அறிவித்தலின் 6-(ii) பந்தியின்கீழ் தகைமைபெறும் உத்தியோகத்தர்களினால் மாத்திரம் நிரப்பப்படல் வேண்டும் :----.

(i) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா தொடர்பான விபரம் :----.

11. சேவை விபரம் :----.

| தற்போதைய பதவி | சேவைக்காலம் | | சேவை நிலையம் | மாவட்டம்/ மாகாணம் |
|---|---|---|---|---|
| | முதல் | வரை | | |
| 1.<br>2.<br>3. | | | | |

12. நீர் ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் தெரிவுசெய்கையில் கவனிக்க வேண்டிய முன்னுரிமை அடிப்படையில் நிரல்படுத்துக.

(i) :----.

(ii) :----.

(iii) :----.

13. இவ்விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், சரியானதும் என்பதை இங்கு உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவுசெய்ததன் பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். எந்தவொரு நீதிமன்றத்தினாலும் குற்றவாளியாகவில்லை என்பதை இத்தால் உறுதிமொழிகின்றேன்.

மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பான பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கடைப்பிடிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் நான் இணங்குகின்றேன் என்பதை உறுதியளிக்கின்றேன்.

இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளையின் விபரம் :----.

காசுக்கட்டளை இலக்கம் :----.

திகதி :----.

தபால் பணிமனை :----.

----,
திகதி : விண்ணப்பகாரரது கையொப்பம்.

***திணைக்களத் தலைவரது சான்றிதழ் :***

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ------- ------------------ --------------------------இத்திணைக்களத்தில் / மாகாண சபையில் ------------------------- எனும் பதவியில் உள்ளவர் எனவும் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் அவரது தனியார் கோவைக்கு அமைவாக உண்மையானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இப்பதவியின் நிமித்தம் இவ்வுத்தியோகத்தர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் இம்மாகாண அரச சேவையில் இருந்து விடுவிப்பு செய்ய முடியும்/முடியாது என்பதை அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின்/மாகாணத்
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :----.

2-54

---

## மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

### வாகன ஓட்டுனர் பயிற்சியாளர்களை பதிவுசெய்வதற்கான எழுத்துமூலப் பரீட்சை - 2008

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகன ஓட்டுனர் பயிற்சியாளர்களை பதிவுசெய்வதற்கு எழுத்துமூல பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தகுதியான இலங்கையர்களிடமிருந்து 2008, மாச்சு 05 ஆந் திகதி வரை கோரப்பட்டுள்ளன. மேற்படி பரீட்சை ஏப்பிறல் மாதம் கொழும்பில் நடைபெறும்.

1. **தகுதிகள்**.- விண்ணப்பதாரி பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும் ;

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) 25 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் ;-

(iii) க. பொ. த. (சா./த.) பரீட்சையில் கணிதம், மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(iv) நீங்கள் குறிப்பிட்ட ஒரு வகையைச் சேர்ந்த வாகனங்களின் பயிற்சியாளராவதற்காக விண்ணப்பிப்பதாயின், அவ்வகை வாகனத்தை ஓட்டுவதற்கான அனுமதிப் பத்திரத்தை விண்ணப்பம் முடிவடையும் திகதியிலிருந்து 5 ஆண்டுகளுக்கு முன்னர் பெற்றிருத்தல் வேண்டும்.

2. **பரீட்சை ஒழுங்குமுறை**.- (1) இப்பரீட்சை சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். (விண்ணப்பதாரி தகுதிபெற்றுள்ள மொழியில்).

(2) எல்லா வினாக்களுக்கும் விடைகள் ஒரே மொழியில் எழுதப்படல் வேண்டும். ஏற்கனவே விண்ணப்பம் செய்த மொழியில் மாற்றங்கள் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.

3. **பரீட்சையில் உள்ளடக்கப்படும் விடயங்கள்**.- (i) இப்பரீட்சை வினாத்தாள் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியதாய் அமையும் :-
மோட்டார் வாகன முகாமைத்துவம் I (1 மணித்தியாலம் ); 50 பல்தேர்வு வினாக்கள்.

(ii) மோட்டார் வாகன முகாமைத்துவம் II (2 1/2 மணித்தியாலம்).

(இவ்வினாத்தாள் பகுதிக் கட்டமைப்பு வடிவிலான 8 வினாக்களை உள்ளடக்கியது. இவற்றில் முதலாம் வினா உட்பட விரும்பிய ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்).

4. **பாடத்திட்டம்**.- இவ்விரு வினாத்தாள்களும் வீதி ஒழுங்குவிதிகள், மோட்டார் வாகன தொழில்நுட்பம் மற்றும் வாகனம் ஓட்டும் திறமை என்பவை தொடர்பான வினாக்களை உள்ளடக்கியது. இவ்வினாத்தாள் கீழே குறிப்பிட்டுள்ள விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும் :-

(i) சிறந்த வாகன ஓட்டுனர் ஒருவரே சிறந்த வாகனப் பயிற்றுனராக இருக்க முடியும் ;

(ii) ஆசிரியர் ஒருவராக, வாகனப் பயிற்றுனர் ஒருவரின் பொறுப்பு, மனப்பாங்கு, திறமைகள் என்பன ;

(iii) வாகனப் பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் வாகனப் பயிற்றுனர்கள் என்பன தொடர்பான ஏற்பாடுகள் ;

(iv) நிர்மாணங்கள் தொடர்பான அறிவும், மோட்டார் வாகன ஒழுங்குவிதிகளும் ;

(v) பெருந்தெருக்கள் ஒழுங்குவிதிகளும், வர்த்தமானி அறிவித்தல்களும் ;

(vi) மோட்டார் வாகன அமைப்புக்கள், ஒழுங்குவிதிகளின் பிரகாரம் வாகன ஓட்டுனர் பயிற்சியாளர் மற்றும் பயிற்சிப் பாடசாலை தொடர்பான ஒழுங்குவிதிமுறைகள் ;

(vii) வாகனம் ஓட்டும் பயிற்சி கைநூல், வாகனப் பயிற்சி ஆலோசனைக் கைநூல் மற்றும் அவற்றின் பாடத்திட்டம் ;

(viii) வாகன பராமரிப்பு, வாகன செயன்முறை மற்றும் வாகனத்தின் பிரதான இயந்திர தொழினுட்பவியல் தொடர்பான அறிவு :

* இயந்திரம் மற்றும் இயந்திர சக்கரப் பொறிமுறை சாதனம் தொடர்பான அறிவு ;
* வாகனத்தை இயக்கும் சுக்கான் (Steering wheel) தொடர்பான அறிவும் அதன் செயற்பாடும் ;
* சமநிலைப்படுத்தும் பொறிமுறை (Suspension) மற்றும் அதன் செயற்பாடும் ;
* வாகன இயக்கத் தடை (Break system) பற்றிய அறிவும் அதன் செயற்பாடும் ;
* மின்சார முறைமை பற்றிய அறிவும் அதன் செயற்பாடும்.

5. **தெரிவுசெய்யப்படும் முறை**.- பரீட்சையில் 40& அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள், அவர்களது தகுதிகளை சரிபார்க்கும் பொருட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப்படுவர். இந்த நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்படுபவர்கள் செயன்முறை பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

5. **விண்ணப்பிக்கும் முறை**.- (1) இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை ஒத்த விண்ணப்பப்படிவமானது A4 அளவு கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரியின் சொந்த, தெளிவான கையெழுத்தினால் நிரப்பப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்திராத, முழுமையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தின் நிழற்பிரதி ஒன்றை விண்ணப்பதாரி வைத்திருப்பது நன்மை பயக்கும்.

(2) விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழியிலேயே விண்ணப்பப்படிவம் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தயாரிக்கும்போது சிங்கள, தமிழ் மொழிகளில் அவை தயாரிக்கப்படும் பட்சத்தில் சிங்கள அல்லது தமிழ் மொழியுடன் ஆங்கிலத்திலும் பரீட்சையின் பெயரானது தலைப்பில் குறிப்பிடப்பட வேண்டும்.

(3) விண்ணப்பமானது, "பரீட்சை ஆணையாளர், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" என முகவரி இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் 05.03.2008 இற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் மேல் இடது மூலையில் 'வாகன ஓட்டுனர் பயிற்சியாளர்களின் எழுத்துமூலப் பரீட்சைக்கான பெயர் பதிவுசெய்தல்' என தெளிவான எழுத்தில் குறிப்பிடப்பட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(4) பரீட்சைக் கட்டணமாக ரூபா 720 அறவிடப்படும். இக்கட்டணமானது மாவட்ட/ பிரதேச செயலகத்திற்கு, "மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் இல. 2003-20-14" என வைப்பிலிடக்கூடிய வகையில் செலுத்தப்படுதல் வேண்டும். இக்கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு (ரசீது) விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும். இப்பற்றுச் சீட்டின் நிழற்பிரதி ஒன்று விண்ணப்பதாரியிடம் இருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஒத்திராத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதால், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒப்பிட்டு சரிபார்ப்பது அவசியம்.

(5) விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்ப மானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியத்துக்கான ஆணையாளர், இராணுவ அதிகாரி, பொலிஸ் சேவையின் உயரதிகாரி அல்லது அடிப்படைச் சம்பளமாக ரூபா 2,37,060 (வருடாந்தம்) அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோருள் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(6) முழுமையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் அல்லது தபால் செய்வதில் ஏற்பட்ட தாமதம் ஆகிய புகார்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(7) பரீட்சை அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்ட பின் இது தொடர்பாக பத்திரிகையில் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 தினங்களின் பின்னரும் பரீட்சை அனுமதி அட்டைகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை எனின் இது

தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு விண்ணப்பதாரி அறிவிக்க வேண்டும். பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கும்வேளை விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதி, கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் (ரசீது), உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, பதிவுசெய்த பற்றுச்சீட்டு (ரசீது) மற்றும் கொழும்பிற்கு வெளிப்பிரதேசமாயின் தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் குறிப்பிடப்பட்ட விண்ணப்பக்கடிதம் ஆகியவற்றை உடன் வைத்திருப்பது நல்லது.

**அடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சைக்கு தோற்றும்போதும் பரீட்சை மேற்பார்வையாளருக்கு பின்வருவனவற்றுள் ஒன்றின் மூலம் விண்ணப்பதாரியின் அடையாளமானது பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. விண்ணப்பதாரிக்கு அனுப்பப்படும் அனுமதி அட்டையானது அவர் பரீட்சைக்கு தகுதியானவர் என்பதனை உறுதிப்படுத்துவதாக அமையாது.

9. விண்ணப்பதாரி, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் கீழ்ப்படிதல் வேண்டும். இவற்றை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளரால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்படுவர்.

பீ. விஜயரட்ன,
மோட்டார் போக்குவரத்து ஆணையாளர்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களம்,
அல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05,
2008.01.19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**வாகன ஓட்டுனர் பயிற்சியாளர்களைப் பதிவுசெய்வதற்கான எழுத்துமூலப் பரீட்சை- 2008**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

3. நிரந்தர முகவரி :-
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :-

5. பிறந்த திகதி :-

ஆண்டு : மாதம் : திகதி :

6. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதியன்று வயது :-

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

7. பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழிமூலம் :
(சிங்களம் 2/தமிழ் 3/ஆங்கிலம் 4) :
(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதவும்.)

8. கல்வித் தகைமைகள் :----.

9. தொழிற்றகைமைகள் :----.

10. பரீட்சைக் கட்டணம் செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக்கொண்ட அலுவலகம், வழங்கிய திகதி :----.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருக்கவும்.)

11. பயிற்றுனர் பயன்படுத்த தீர்மானிக்கும் வாகன வகை :----.

12. உங்களுடைய-

(i) வாகன சாரதி அனுமதிப்பத்திர (Driving License) இலக்கம் :----.

(ii) வழங்கப்பட்ட திகதி :----.

(iii) வாகன வகை :----.

எனது அறிவுக்கு எட்டியவரை என்னால் மேலே கொடுக்கப்பட்ட சகல தகவல்களும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். என்னால் கொடுக்கப்பட்ட கூற்றுக்கள் தவறானதாக இருக்கும் பட்சத்தில் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட எனது பதிவு இரத்துச்செய்யப்பட்டு வாகனப் பயிற்றுனராவதற்கு தகுதியற்றவனாவேன் என நான் அறிவேன். பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகளுக்கும் நான் கீழ்ப்படிவேன் எனவும் உறுதி கூறுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

2-118

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் IV பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 3,360.00 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை-2008**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 01.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.01.2008 |
| | | வெள்ளி | 08.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.01.2008 |
| | | வெள்ளி | 15.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.02.2008 |
| | | வெள்ளி | 22.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.02.2008 |
| | | வெள்ளி | 29.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.02.2008 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 07.03.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.02.2008 |
| | | வெள்ளி | 14.03.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.02.2008 |
| | | புதன் | 19.03.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.03.2008 |
| | | வெள்ளி | 28.03.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.03.2008 |
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 04.04.2008 | .. | நண்பகல் 12 | புதன் | 19.03.2008 |
| | | வெள்ளி | 11.04.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.03.2008 |
| | | வியாழன் | 17.04.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.04.2008 |
| | | வெள்ளி | 25.04.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.04.2008 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.